2013 மே 14]

491—

நியாய விலைக் கடை

***459—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, மேல்செங்கப்பாடி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதியில் உள்ள மேல்செங்கப்பாடி கிராமத்தைச் சேர்ந்த 63 குடும்ப அட்டைதாரர்கள் டி. ஆண்டியூர் தாய் நியாய விலைக் கடையில் பொருட்களைப் பெற்று வருகிறார்கள். தற்போது நடைமுறையில் உள்ள புதிய பகுதிநேரக் கடை அமைக்க 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், மேல்செங்கம்பாடி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை எனத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதி, வேடகட்டமடுவு பஞ்சாயத்து, மேல்செங்கப்பாடி கிராமத்தில் மொத்தமே 150 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அவர்களில் 85 பேர் குடும்ப அட்டைகளைப் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் ரேஷன் கடைகளுக்குச் செல்ல வேண்டுமென்றால், 3 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஆண்டியூருக்குச் செல்ல வேண்டும். தாய்க் கடையிலே 600—க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல,*

ஒரு நாளைக்கு மண்ணெண்ணெய் வழங்குவதற்காக நேரத்தை ஒதுக்குகிறார்கள்; அரிசி வழங்குவதற்காக ஒரு நாள் ஒதுக்கப்படுகிறது; சர்க்கரை வழங்குவதற்காக ஒரு நாள் ஒதுக்கப்படுகிறது. இப்படி கூலி வேலைக்குச் செல்லக்கூடிய அந்தக் கிராமத்திலுள்ள மக்கள் ரேஷன் கடைகளுக்குச் சென்று பொருட்களை வாங்குவதால் மாதத்தில் 4 நாட்கள் வேலையை இழக்கக்கூடிய நிலை உள்ளது. ஆகவே, மக்களுக்காகத்தான் திட்டங்கள் என்ற அடிப்படையில், சில கிராமங்களிலே இத்தனை குடும்பங்கள், இத்தனை குடும்பத்திற்கும் இத்தனை குடும்ப அட்டைகள் உருவாக்க வேண்டும் என்றால் பல ஆண்டுகள் ஆகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் சிறப்பு இனமாகக் கருத வேண்டும். தற்போது அந்தக் கிராமத்தில் மேலும் புதிதாக 50 பேர் குடும்ப அட்டைகள் வேண்டி விண்ணப்பித்துள்ளார்கள். ஆகவே, 130 குடும்ப அட்டைகள் உள்ள மேல்செங்கப்பாடி கிராமத்திற்கு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், திரு. டில்லி பாபு அவர்கள் 63 குடும்ப அட்டைகள் உள்ள மேல்செங்கப்பாடி கிராமத்திற்கு ஒரு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்று கோரியுள்ளார்கள். அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தவரை, இந்தியாவிலேயே மிகச் சிறப்பாகச் செயல்படுத்திவரும் ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர், இதுவரை தமிழகத்தில் 301 புதிய முழுநேரக் கடைகளும், 599 பகுதிநேரக் கடைகளும் திறக்கப்பட்டுள்ளன. இதில் அரூர் தொகுதியிலே மட்டும், மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்களுடைய தொகுதியிலே மட்டும், 8 பகுதிநேரக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

2013 மே 14]

அதுமட்டுமல்ல, 63 குடும்ப அட்டைகளுக்கு பகுதிநேரக் கடை திறந்தால், நிருவாகக் குளறுபடிகள் ஏற்படும் என்பதையும், தாய்க் கடைகளின் விற்பனையாளர்தான் 3 நாட்கள் பகுதிநேர அங்காடிக்கும் செல்லக்கூடிய நிலை வருகிறது. எனவே, தாய்க் கடையில் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்திற்கு சீரான நிலை ஏற்படாமல், குளறுபடி ஏற்படுகிறது என்பதைக் கருத்திலே கொண்டுதான், இந்த விதிமுறைகள் எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில், தாய்க் கடையில் சீரான விநியோகம் பாதிக்கப்படாத நிலை ஏற்படுகின்றபட்சத்திலும், மாண்புமிகு உறுப்பினர் 3 கி.மீ. தூரத்திற்குச் செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டு இருப்பதாலும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி மண்ணெண்ணெய், சர்க்கரை, அரிசி ஆகிய பொருட்கள் ஒரே நேரத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்குக் கிடைப்பதற்கு ஆவன செய்யப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றி. ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சித்தேரி மலையிலுள்ள லேம்ப் சொசைட்டியில் உள்ள கடைகளைப் பிரிப்பதற்காக மண்ணூருக்கு உத்தரவு அளித்திருந்தார்கள். மண்ணூர், சோலக்கொட்டாய், ஆவாரங்காட்டூர், பாகப்பட்டி, பச்சிலம்பட்டி, தேக்கனாம்பட்டி போன்ற கிராமங்களுக்கெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கடைகளைப் பிரிக்கலாம் என்று உத்தரவு பிறப்பித்து, மாநிலத்திலுள்ள உணவுப் பொருள் மற்றும் பாதுகாப்புத் துறை ஆணையரிடத்திலே ஒரு வருட காலமாக கோப்பு கிடப்பிலே இருப்பதாக அறிகிறேன். ஒரு வருடமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடையைப் பிரிக்க உத்தரவு பிறப்பித்தும் பொருட்கள் வழங்கப்படவில்லையே என்று அந்த மக்கள், எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, காரப்பாடி என்ற மலை கிராமத்தில், ஏறக்குறைய 12 கி.மீட்டர் தூரம் ஒத்தையடிப் பாதையில் நடந்து செல்ல வேண்டும். அந்த மக்கள் மலையிலிருந்து கீழே இறங்கி, பொருட்களை வாங்கி தலையில் சுமந்து செல்லக்கூடிய அவல நிலை இருக்கிறது. அந்தக் கிராமத்தில் அதிகமான மக்கள்தொகை உருவாகவில்லை. நடமாடும் உணவுப் பொருட்களை வழங்கக்கூடிய அப்பேர்ப்பட்ட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். நடமாடும் கடைகளின் மூலமாக, அப்பேர்ப்பட்ட மலைக் கிராமங்களுக்கு உணவுப் பொருள் விநியோகித்தால் நன்றாக இருக்கும். ஆகவே, கிடப்பிலே போடப்பட்ட கோப்பை பரிசீலனை செய்து, 9 பகுதிநேர ரேஷன் கடைகளைப் பிரிப்பதற்கும், மலைப் பகுதிகளிலே நடமாடும் ரேஷன் கடைகள் மூலமாகப் பொருட்களை வழங்குவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிடப்பில் இருப்பதாகச் சொன்னார்கள். கிடப்பில் போடப்பட்டுள்ளது என்று சொல்வது சரியான வார்த்தையாகாது. எப்படியென்று சொன்னால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அதிகாரத்திற்கு மேலே செல்கிறபொழுதுதான் ஆணையாளருக்கு வருகிறது. அவருடைய அதிகாரத்திற்குள் கடையைத் திறக்க வேண்டுமென்று சொன்னால், பகுதிநேரக் கடையில் 150 கார்டுகளும், தாய்க் கடையில் 500 கார்டுகளும் இருக்க வேண்டும், இரண்டுக்கும் இடையே 1½ கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டுமென்ற விதிகள் பூர்த்தியாகும் என்று சொன்னால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே கடையைத் திறந்துவிடுவார்.

திறக்க முடியாத சூழ்நிலையில்தான் ஆணையாளருக்கு வருகிறது. ஆணையாளர் அதைப் பரிசீலித்து, அதில் என்னென்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்று ஆராய்ந்து, வாய்ப்புகள் இருக்கிறபட்சத்தில் தான், அவர்கள் கடையைத் திறக்க உத்தரவிட முடியும். அந்த அடிப்படையிலேதான் அந்த மனுக்களெல்லாம் ஆய்விலே இருக்கும் என்பதுதான் உண்மையான கருத்தாக இருக்க முடியும் என்பதனை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மலைப் பகுதியில் இருக்கிற கடைகளுக்கு நடமாடும் அங்காடிகள் கோரியுள்ளார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மலைப் பகுதியில் வாழ்கிறவர்களுக்கு நடமாடும் அங்காடிகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்கிற உத்தரவைப் பிறப்பித்துள்ளார்கள். அந்த உத்தரவின் அடிப்படையில், ஆய்வுகள் மேற்கொண்டு, அவர்களுக்கெல்லாம் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 492, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

492—

பால் குளிரூட்டும் நிலையம்

***17396—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?